**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 225/2015**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
| NAME | பாஸ்கர் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 09.02.2026.

**2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் ஆட்டோ டிரைவராக உள்ளேன். சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.146/2இ, 176, 248/4. இந்த சொத்திற்காக தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல, பக்கத்து சொத்து என்னுடையது. பக்கத்தில் என் நிலம் உள்ளது என்பதற்கு ஆவணம் ஏதாவது போட்டுள்ளேனா என்றால் இல்லை.

2. சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை. என்னை சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தது என்றால் காமராஜ். இந்த வழக்கை காமராஜ் போட்டுள்ளார். என்ன வழக்கு போட்டுள்ளேன் என்றும் என்ன சர்வே எண் என்றும் காமராஜ் சொன்னாரா என்றால் இல்லை. இந்த வழக்கை யார்யார் போட்டுள்ளார் என்று தெரியும். யார் யார் போட்டுள்ளார்கள் என்றும், என்ன போட்டுள்ளார்கள் என்றும் பார்த்தேன். யார் காட்டினார்கள் என்றால் நானாக சென்று பார்த்தேன். எங்கு சென்று பார்த்தேன் என்றால் மோகன் வழக்கறிஞரை வைத்து நாங்கள் தான் வழக்கை தாக்கல் செய்தோம். 2015–ல் தாக்கல் செய்தேன்.

3. எங்கள் பங்காளிகள் சேர்ந்து தான் வழக்கறிஞரை பார்க்க போனோம். 2ஆம் பிரதிவாதி கோவிந்தராஜ் உடல் ஊனமுற்றவர் என்றால் சரிதான். அவர் இன்று நீதிமன்றம் வந்துள்ளார். அவர் கிரயம் வாங்கிய பிறகு தான் நாங்கள் வக்கீலை பார்க்க சென்றோம் என்றால் சரிதான். கோவிந்தராஜ் வாங்குவதற்கு முன்பு சொத்தை யார் வாங்கியது என்றால் கோவிந்தசாமி மற்றும் சம்மந்த கவுண்டர் வாங்கினார்கள். கோவிந்தசாமி தட்சிணாமூர்த்தியின் அப்பா. அவர்கள் இருவரும் 1986–ல் கிரயம் வாங்கினார்கள்.

4. கோவிந்தசாமி நிலம் வாங்கியபிறகு பள்ளமான இடத்தை மண் போட்டு நிரப்பினார் என்றால் சரியல்ல இன்று வரை மேட்டு நிலமாகவே உள்ளது. சம்மந்த கவுண்டர் ஆந்திரா என்றால் தமிழ்நாட்டு ஆள் தான் அவருக்கு சாப்பாடு போட ஆள் இல்லாததால் ஆந்திராவுக்கு போய்விட்டார். எந்த வருடம் ஆந்திரா போனார் என்று எனக்கு தெரியாது. அவர் திருமணமாவதற்கு முன்பே ஆந்திரா போய்விட்டார். தாவா சொத்தை தட்சிணாமூர்த்தியின் அப்பா கோவிந்தசாமி அனுபவித்து வந்தார் என்றால் பாதி சொத்தை கோவிந்தசாமி அனுபவித்தார் மீதி பாதி சொத்தை கருணாகரன் அனுபவித்து வந்தார்.

5. தாவா தாக்கல் செய்யும் வரை கோவிந்தசாமி அனுபவித்து வந்தார் என்றால் கோவிந்தசாமி சாகும்வரை அனுபவித்து வந்தார், பாதி சொத்தை கருணாகரன் மாமா அனுபவித்து வந்தார், 2015–ல் வழக்கு போட்டபிறகு நாங்கள் வேர்கடலை போட்டிருந்தோம் அதை பிரதிவாதிகள் பிடுங்கி வந்துவிட்டார்கள். மேற்படி விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சுந்தரம்மாள் யார் என்று எனக்கு தெரியாது. சம்பூரணம் அம்மாளுக்கு எந்த தேதியிட்ட பத்திரப்படி தாவா சொத்து வந்தது என தெரியுமா என்றால் தெரியாது.

6. 21.04.1984–ல் சம்பூரணம் அம்மாள் தாவா மொத்த சொத்தையும் தட்சிணாமூர்த்தியின் அப்பா கோவிந்தசாமிக்கு கிரயம் கொடுக்க ஒப்பந்தம் போட்ட விவரம் தெரியுமா என்றால் 1985–ல் போட்டார்கள். மொத்த ரூபாயும் வாங்கி கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 21.03.1986 மற்றும் 24.03.1986 ஆகிய தேதிகளில் மொத்த சொத்தையும் சம்பூரணம் அம்மாள் கோவிந்தசாமிக்கு விற்றுவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். கிரய ஒப்பந்தத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை.

7. தாவா சொத்தை கோவிந்தசாமி 1ஆம் பிரதிவாதி தட்சிணாமூர்த்திக்கு 29.11.2004–ல் தான செட்டில்மெண்ட் எழுதிகொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தட்சிணாமூர்த்தி அவரது மனைவி கனகா பெயரில் செட்டில்மெண்ட் எழுதிவைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதன்பிறகு செட்டில்மெண்ட் ஆவணத்தை தட்சிணாமூர்த்தி ரத்து செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதன்பிறகு 1ஆம் பிரதிவாதி தாவா சொத்தை கோதண்டம் என்பவருக்கு அடமானம் போட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதன்பிறகு தான் 1ஆம் பிரதிவாதி, 2ஆம் பிரதிவாதி கோவிந்தராஜிக்கு சொத்தை விற்றார் என்றால் விற்கவில்லை, அடமானம் தான் போட்டார்.

8. தட்சிணாமூர்த்தி 2ஆம் பிரதிவாதி கோவிந்தராஜிக்கு சொத்தை விற்கவில்லை என்றும் அடமானம் தான் போட்டார் என நான் சொல்கிறேன் என்றால் சரிதான். தட்சிணாமூர்த்தி இன்று நீதிமன்றம் வரவில்லை. தட்சிணாமூர்த்தி, கோவிந்தராஜிக்கு அடமானம் போட்டார் என்ற விவரத்தை யார் சொன்னது என்றால் தட்சிணாமூர்த்தியே சொன்னார். 10 வருடத்திற்கு முன்பு சொன்னார். எனக்கும் தட்சிணாமூர்த்திக்கும் தகராறு இல்லை சுமுகமாக தான் உள்ளோம் என்றால் சரிதான். வழக்கு தொடர்பாக தட்சிணாமூர்த்தியிடம் ஆலோசித்தோமா என்றால் ஆலோசித்தோம்.

9. அவர் கோவிந்தராஜிக்கு அடமானம் எழுதி கொடுத்தாரா அல்லது கிரயம் எழுதி கொடுத்தாரா என்றால் என்னிடம் அடமானம் போட்டதாக தான் சொன்னார். இன்றுவரை தட்சிணாமூர்த்தி, கோவிந்தராஜிக்கு என்ன பத்திரம் எழுதி கொடுத்தார் என நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தை ரத்து செய்ய சொல்லி தட்சிணாமூர்த்தி வழக்கு எதுவும் போடவில்லை என்றால் சரிதான். தட்சிணாமூர்த்தி, கோவிந்தராஜிக்கு அடமானம் பத்திரம் தான் எழுதிகொடுத்தார் என எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி எனது சித்தப்பா.

10. சொத்து இன்றுவரை கரம்பாக உள்ளதா என்றால் கரம்பாக உள்ளது கொஞ்சம் இடத்தில் தட்சிணாமூர்த்தி பயிர் செய்துள்ளார். 1/2 ஏக்கரா பயிர் செய்துள்ளார். உடல் ஊனமுற்ற 2ஆம் பிரதிவாதிக்கு தட்சிணாமூர்த்தி சொத்தை கிரயம் கொடுத்துவிட்டு குடும்ப சொத்து போய்விட்டதால் வாதிகளும் நாங்களும், 1ஆம் பிரதிவாதியும் சேர்ந்து அவர் மீது பொய்யாக இந்த வழக்கை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இன்று வரை 2ஆம் பிரதிவாதி கோவிந்தராஜ் தான் சொத்தை அனுபவிக்கிறார் என்றால் சரியல்ல. இறந்துபோன 1ஆம் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ய விருப்பம் படவில்லை என்றாலும் நானும், 1ஆம் பிரதிவாதியும் சேர்ந்து தான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.